# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/18 - 2020 මාර්තු මස 03 වැනි අඟහරුවාදා - 2020.03.03

*2165/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பாராளுமன்றத் தேர்தல் - 2020**

பிரதேசத்தில் இருக்கும் நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளர்கள் வேறொரு வாக்ககெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகள்

***1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆ ஆம் பிரிவு***

*பிரதேசத்தில் இருக்கும் நிலைமை காரணமாக தனக்கொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதுபோகுமென்ற நியாயமான அச்சத்தைக் கொண்டுள்ள வாக்காளரொருவர் வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கையொன்றை முன்வைக்கலாம். 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 127 ஆ ஆம் பிரிவின் கீழ் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*2. இதற்குத் தேவையான விண்ணப்பப்பத்திரங்களை அனைத்து மாவட்டங்களின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களிலும், பிரதேச செயலாளர்களின் மற்றும் கிராம அலுவலர்களின் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும். சட்டத்திற்கிணங்க பெயர்குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட நாளிலிருந்து அதாவது, 2020.03.02 ஆந் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் குறித்த விண்ணப்பப்பத்திரங்களை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.*

*3. விண்ணப்பதாரி வதிகின்ற பிரிவின் கிராம அலுவலரைக் கொண்டு விண்ணப்பப்பத்திரத்தை அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரி அவரது தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கத்தை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடுவது கட்டாயமாகும். கிராம அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்படாத விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*


1A - G 31977 — 167 (2020/03)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*4. விண்ணப்பதாரர்களினால் 2019 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை அடிப்படையாகக் கொண்டு அதிலுள்ள தகவல்களின் மூலம் விண்ணப்பப்பத்திரத்தைப் பூரணப்படுத்த வேண்டுமென்பதுடன், அவ்விடாப்புக்கள் அனைத்து மாவட்டச் செயலகங்களிலும்/ கச்சேரிகளிலும், மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும் வைக்கப்படும்.*

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளை மற்றும் ஆலோசனைகளுக்கமைய,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020, மார்ச்சு 03.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.